செங்கோட்டை நகர் மன்றத்தின் இயல்புக் கூட்டம்
03.06.20 அன்று பிற்பகல் 4.00 மணியளவில்
நடைபெற்றதன் கூட்ட நடவடிக்கைகள்
தலைமை திரு. ந. ஜெ. கண்ணன் பி.இ.,
தனி அலுவலர்.

மன்றப்பொருள்..1

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் அலுவலக தொலைபேசி செய்தியில் இந்நகராட்சி பகுதியில் சாலைப் பணிகள் மேற்கொள்ள வேண்டி, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020-2021ன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதற்கிணங்க கீழ்க்கண்ட சாலைப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதற்கும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும் மனறத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ (லட்சத்தில்) |
| --- | --- | --- |
| 1 | ஆனந்த் தியேட்டர் சாலை, காமராஜ் காலனி சாலை, வல்லம் சாலை 1 மற்றும் 2, பேருந்து நிலைய பின்பக்கச்சாலை, கிழக்கு, மேற்கு, வடக்கு ரதவீதி (வார்டு எண். 11,12,2,4) ஆகிய சாலைகளின் தார்ச் சாலை புதுப்பித்தல் பணி | ரூ. 128.00 |
| 2 | பெரியசாமி தெரு, சுப்பையா தெரு, பெரிய பள்ளிவாசல் தெரு, பூம்புகார் ரோடு, காதர் ஒலி தெரு, வடக்குரதவீதி குறுக்கு தெரு, ஆகிய சாலைகளில் தார்ச் சாலை புதுப்பித்தல் பணியும், வெள்ளையன் தெரு, ஆறுமுகசாமி ஒடுக்கம் ஆகிய சாலைகளில் பேவர் பிளாக் பதிக்கும் பணி (வார்டு 4,6,18,20,21,22) | ரூ. 100.00 |

அலுவலக்குறிப்பு..

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) நகராட்சி நிதிநிலைமை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், மேற்படி சாலைப்பணிகளுக்கு முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்யவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சி கே.சி.சாலையில் உள்ள அரசு மருத்துவமனையில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண். நாள் 14.05.2020 ல் ஒப்புதல் வழங்கியுள்ளதால், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 27.05.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி கே.சி.சாலையில் உள்ள அரசு மருத்துவமனையில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்ய | ரூ. 2.20 | திரு.எஸ்.பரமசிவம் | 0.34 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் | 1.19 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலககுறிப்பு..

மேற்படி பணி மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக 0.34 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.பரமசிவம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்..3

செங்கோட்டை நகராட்சி கே.சி.சாலையில் உள்ள நீர்த்தேக்க நிலையத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 25 எச்.பி. திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு, மேலூர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மின் மோட்டார் பழுது ஏற்பட்டால் மேற்படி மேலூர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும், எனவே, நகராட்சி இருப்பில் இருந்த 7.5 எச்.பி. நீர்முழ்கி மின் மோட்டாரை Standby மோட்டாராக பொருத்தவும், மேலும், 25 எச்.பி. மற்றும் 30எச்.பி. மின்மோட்டார்க்குரிய பேனல் போர்டுகள் பழுதடைந்துள்ளதையும் பழுது நீக்குவதற்கு அனுமதியும் குடிநீரின் அவசிய அவசர கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடித்தமைக்கும் உத்தேச செலவினம் ரூ. 51498/-ஐ நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்படி பணியினை மேற்கொண்டதற்கு ஒப்புதலும், மேற்படி பணிக்குரிய செலவினம் ரூ. 51,498/- நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.